இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 02-04-2024

# வரி பயங்கரவாதம்

**பா.ஜ.க. தலைமையும், பிரதமர் நரேந்திர மோடியும் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம், தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டு இருக்கிறார்கள். வருமான வரி கணக்கில் முரண்பாடு இருப்பதாகச் சொல்லி காங்கிரசு கட்சிக்கு 1,823 கோடி ரூபாயை அபராதம் விதித்துள்ளார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அபராதம் விதித்துள்ளார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் இவர்கள் நிம்மதியாக பங்கெடுக்கக் கூடாது என்பதுதான் இதன் நோக்கம், வேறு எதுவுமில்லை!**

ஐ.நா.சபையே இதனைக் கண்டித்து விட்டது. “ஒரு நாட்டில் மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தியாவில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்” என்று ஐக்கியநாடுகள் அவை சார்பிலான அறிக்கை, மோடிக்கு எதிரான கண்டன அறிக்கையாகவே வெளியாகி உள்ளது. காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கியதையும், அபராதம் விதித்ததையும், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்ததையும் சுட்டிக் காட்டி ஐ.நா. இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

**உலகநாடுகளால் பாராட்டப்படும் பிரதமர் என்று மோடியைச் சொல்லிக் கொள்கிறார்களே, அவர் ஐ.நா.அறிக்கைக்கு பதில் சொல்ல வேண்டாமா? உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் மானம் காற்றில் பறக்கிறதே? இதற்கு யார் காரணம்? மோடிதானே!**

காங்கிரஸ் கட்சி 2018-19 ஆம் நிதியாண்டுக்கான வருமான வரிக் கணக்கை 44 நாட்கள் தாமதமாகத் தாக்கல் செய்து விட்டதாம். அதனால் அந்தக் கட்சியின் 4 வங்கிக் கணக்குகளை முடக்கி இருக்கிறார்கள். அதற்கு 210 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளார்கள்.

2017 -18

2018 - 19

2019 - 20

2020 - 21 - ஆகிய நான்கு நிதியாண்டுகளுக்கான வருமான வரிக் கணக்கிலும் முரண்பாடுகளாம். இதை வைத்து 1,823 கோடி ரூபாயை அபராதமாகச் செலுத்த வேண்டும் என்கிறார்கள். இதில் 1,076 கோடியே 35 லட்சம் ரூபாய் அபராதம். மீதி உள்ள தொகை அதற்கான வட்டித் தொகையாம். இவை ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குகள் ஆகும். டெல்லி உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தடை வாங்க காங்கிரஸ் கட்சிக்கு உரிமை இருக்கிறது. அதற்கான நேரத்தை காங்கிரஸ் கட்சி பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்காமல் அபராதம் போட்டுள்ளது பச்சை அரசியல் பழிவாங்குதல் அல்லவா? தேர்தலில் காங்கிரஸ் கட்சியை பங்கெடுக்க விடாமல் தடுக்கும் சூழ்ச்சி இது.

**காங்கிரஸ் கட்சியை அரசியல் ரீதியாக மக்கள் மன்றத்தில் எதிர்கொள்ள தைரியம் இல்லாமல், இப்படி கொல்லைப்புறம் வழியாக காங்கிரஸ் கட்சியை பலவீனப்படுத்தப் பார்க்கிறது பா.ஜ.க. ‘வரி பயங்கரவாதம்’ என்று குற்றம் சாட்டி இருக்கிறார் ராகுல் காந்தி.**

தேர்தல் பத்திர ஊழல் வழக்கில் சிக்கியது முதல் விழிபிதுங்கிக் கிடக்கிறது பா.ஜ.க. ரூ.8 ஆயிரம் கோடி பணத்தை தேர்தல் பத்திரங்களின் மூலமாக சுருட்டி இருக்கிறார்கள்.

**“தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கியதன் மூலம் 38 கார்ப்பரேட் நிறுவனங்கள், 179 முக்கியமான ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்களை மத்திய மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளிடம் இருந்து பெற்றுள்ளது. இந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமாக ரூ.2,004 கோடி நன்கொடை வழங்கியதன் மூலமாக மொத்தம் ரூ.3.8 லட்சம் கோடி மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.41 கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தமாக 56 முறை, அமலாக்கத் துறை, சிபிஐ, வருமான வரித்துறை சோதனைகளுக்கு ஆளாகியுள்ளன. இந்நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு ரூ.2,592 கோடி கொடுத்துள்ளன. இதில் ரூ.1,853 கோடி விசாரணை அமைப்புகளின் சோதனைக்குப் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது”** என்று ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி இருக்கிறார். இவை எல்லாம் வெளியில் பரவி வருகிறது. பா.ஜ.க.வின் ஊழல் முகம் அம்பலம் ஆகி வருகிறது. அதில் இருந்து திசை திருப்பவும் இதுபோன்ற நடவடிக்கையைச் செய்கிறார்கள்.

**“மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தை பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிடுக்கப் பட்டிருக்கிறார். மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்” - என்று ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது. பா.ஜ.க.வின் யோக்கியதை இதுதான்.**

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டுள்ள மதுபான கொள்கை வழக்கில் மிக முக்கியக் குற்றவாளி ஒருவரின் பெயர் ரகாவா மாகுண்டா. இவர் அப்ரூவராக மாறிவிட்டார். இவரது தந்தை ஸ்ரீநிவாசலு, தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளராக ஆந்திராவில் போட்டியிடுகிறார். அவரை ஆதரிக்கிறது பா.ஜ.க. கட்சி. இவர்களது யோக்கியதை இதுதான்.

**ஏர் இந்தியா - இந்தியன் ஏர்லைன்ஸ் இணைப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு அமலாக்கத்துறை விசாரணையில் இருப்பவர் பிரபுல் படேல். இவர் இப்போது பா.ஜ.க. கூட்டணியில் இருக்கிறார். இந்த வழக்கை முடித்துக் கொள்கிறோம் என்று டில்லி ரோ அவென்யூ நீதிமன்றத்தில் சி.பி.ஐ. மனு போட்டுள்ளது. அவ்வளவு தான் பா.ஜ.க. வாஷிங் மிஷினில் பிரபுல் படேல் வெளுக்கப்பட்டு விட்டார். வெளியே வந்துவிடுவார். இவர்களது யோக்கியதை இதுதான்.**

இதையெல்லாம் மறைக்கவே காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகிறது. முடக்குவோர், விரைவில் முடக்கப்படுவார்கள்.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்புரை! கரூர் காங். வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து

# விராலிமலை தொகுதி - இலுப்பூரில் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

*புதுக்கோட்டை ஏப்.2-*

இந்தியா கூட்டணியின் கரூர் நாடாளுமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி இலுப்பூரில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்புரையிலும், சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையிலும்,

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கரூர் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணிக்கு வாக்கு கேட்டு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர், விராலிமலை தொகுதி மேற்பார்வையாளர் அஞ்சுகம் பூபதி, காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் ஆர்.எம்.பழனிச்சாமி, பெரியண்ணன் அரசு, காங்கிரஸ் மாவட்ட தலைவர் முருகேசன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் செங்கோடன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, மனித நேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் அப்துல் கனி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் கரு.வெள்ளை நெஞ்சன், பெனர்ட் அந்தோணி ராஜ், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் , த.சந்திரசேகரன், செ. அசோக் பாண்டியன், கே.ஆர். என்.போஸ், அரு.வீரமணி, ஆ.செந்தில், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, , எம்.லியாகத் அலி, மு.பி. மணி, சு.சண்முகம், எம். எம்.பாலு, தென்னலூர் எம்.பழனியப்பன், ராப்பூசல் செந்தில், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், கே.பி. ஐயப்பன், ஓ.எஸ். வெங்கடாசலம், வை.விஜயகுமார், முகமது ரிஷா, குமார், பூங்குடி சிவா, மாவட்ட கவுன்சிலர்கள் துவாரவயல் த.செல்வம், சாந்தி தங்கசிங்கம், கை.பழனிச்சாமி, முனைவர் குறிஞ்சிவாணன், அ.பிரபா, கே.எஸ். ச. இளையசூரியன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, ஆ.ராஜேந்திர சோழன், இ.செந்தில் ராஜா. மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை ‘இந்தியா’ கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.சுதாவை ஆதரித்து – இன்று

# தஞ்சை மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் திருச்சி சிவா எம்.பி. பிரச்சாரம் - பொதுக்கூட்டம்!

## வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

*தஞ்சை, ஏப். 2-*

தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியின் சார்பாக இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் ஆர். சுதாவை ஆதரித்து இன்று (02.04.2024) மாலை கீழ்கண்ட விவரப்படி திருச்சி சிவா எம்.பி. பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் வாகனத்தின் மூலம் பரப்புரையிலும், கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் பொதுக் கூட்டத்திலும் ஈடுபட உள்ளதால் மாநகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்து அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் சட்டமன்ற தொகுதி

2.04.2024 - மாலை 3.00 மணிக்கு - அய்யம்பேட்டை - மாங்குடி ரோடு, 4.00 மணிக்கு - பாபநாசம் - மேலவீதி, அண்ணாசிலை அருகில், 5.00 மணிக்கு - கபிஸ்தலம் - பாலக்கரைகடைத்தெரு, 6.00 மணிக்கு - சுவாமிமலை - தேரடி - ஐ மாஸ் லைட்அருகில் தேர்தல் பிரச்சாரம் நடைபெறுகிறது.

இரவு 7 மணிக்கு கும்பகோணம்சட்டமன்றதொகுதியில் கும்பகோணம்

மார்னிங்ஸ்டார்பள்ளிஅருகில், பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## கழக வேட்பாளர் அருண் நேருவை ஆதரித்து பெரம்பலூர் நகரத்தில் வாசுகி ரமணன் வாக்குச் சேகரிப்பு! வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப். 2 –

பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் அருண் நேருவை ஆதரித்து, பெரம்பலூர் நகரத்தில் உள்ள 7,8,9,10,11 மற்றும் அரனாரை ஆகிய இடங்களில், மாநில மகளிர் அணி ஆலோசகர் வாசுகி ரமணன் தி.மு.க.அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும், மத்திய பா.ஜ.க.அரசு தமிழகத்திற்கு செய்து வரும் துரோகங்களை பட்டியலிட்டும்

வாக்குகள் சேகரித்தார். இதில் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொதுக்குழு உறுப்பினர் எஸ். அண்ணாதுரை, மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல்பாரூக், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா,தொ.மு.ச.மாவட்ட கவுண்சில் தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ்,

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், வார்டு செயலாளர்கள் சிமியோன்,மீனா அசோக்குமார், எம்.மணிவாசகம், நிஷாந்த், ராமகிருஷ்ணன், மகேந்திரன், முத்துகுமார், சுரேஷ்,

நகராட்சி கவுன்சிலர் ஷாலினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

